# ELEGY

## ON

# THE RAJA OF PANAGAL


BY

**A. K. PARANTHAMA MUDALIAR,**

*Secretary, Pachaiyappa's College Tamil Sangam.*



PACHAIYAPPA'S COLLEGE UNION,

MADRAS.

25—2—'29.

*Price* *0-1-0.*

# பானகல் மன்னர் காஞ்சி

ஆசிரியர்:—

அ. கி. பரந்தாம முதலியார்

(பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச் சங்கக் காரியதரிசி)

பச்சையப்பன் கல்லூரிச் சங்கம்,

சென்னை.

விலை] 25—2—'29. [0—1—0

PRINTED AT
SRI BHARATHI PRESS,
CHOOLAI, MADRAS.

# பானகல் மன்னர் காஞ்சி

## நிலைமண்டில ஆசிரியப்பா.

ஆர்கலித் தென்றிசை மார்கழி புகுந்திட
மன்பதைக் குற்ற துன்பம தறியா
திளமரக் காவினுங் குளக்கரைப் பாங்கருங்
கிளிமொழி யாடக் குயிலினம் பாடக்
கன்றினந் துள்ளி மன்றிடை உலாவுந்
தாய்முலை உண்டு பாய்ந்தங் கோடக்
கற்களின் குவியல் புற்புதர் மேடை
பனைவேய் குடிகை இனையன மீமிசைக்
கொழுகொம் பின்றி விழுந்தலைந் தோடும்
பூசுணை மாமலர் காசுறப் பூப்ப
எவ்விடஞ் செலினும் அவ்விடம் எல்லாம்
இயற்கை என்னும் எழிலார் மாது
புதவுடை பூண்டு குதுகலித் திருக்க,
மங்களந் தங்கிடப் பொங்கலும் இங்குறும்
எங்களுக் கென்குறை என்றெதிர் நோக்கிய
எந்தமிழ் மக்கட் கந்தோ! அந்தோ!
துன்னிய துன்பம் பன்னுதற் கெளிதோ!
புகழெனு மங்கையும் பொறையெனு மங்கையும்
தங்குதற் கிடனிலா தெங்களோ டேங்கி
வாட்டமுற் றிருத்தலுங் கேட்டிலை கொல்லோ!
பகைமை யில்லாத் தகைமை பூண்ட
பானகல் வேந்தே! பாய்ந்தொளிந் தனையே!
பரிதியஞ் செல்வ! பாரினில் நீதான்
ஆக்குதி காக்குதி அழிக்குதி என்பர்;
முத்தொழி லதனில் முதற்றொழில் செயாது

வறிதேன் வீசுதி? வறிதேன் வீசுதி?
வெண்ணிற மதியே! தண்மை ஈவதில்
வள்ளியோன் நீஎன விள்ளுவர் சான்றோர்;
எம்மனங் குளிர அம்ம நினக்கும்
ஆற்றல் இலதோ? மாற்றுதல் அரிதோ?
என்னே செப்புதி; கொன்னே மிளிருதி!
பொங்கலே! நீவரின் மங்களம் வருமெனத்
துன்ப மதனைத் தூதனுப் பினையே;
இன்பம் பெருக்கத் துன்பம் வேண்டென
மண்ணுல குறுமுன் எண்ணினை கொல்லோ?
போகியும் வந்தென்? பொங்கலும் வந்தென்?
கரந்த மன்னரைக் காணுதல் எங்ஙனம்?
எம்மரும் பானகல் எழிலார் வேந்தே!
அம்ம! நின் திறன் அடைகுநர் எவர்காண்?
வெலமக் குலத்து வேங்கட ரங்கன்
அருந்தவப் பயனால் மருந்தெனத் தோன்றி
ஆரியந் தெலுங்கினும் நேரிலாப் புலமை
அறுமூ வாண்டினுள் உறும்வழி கண்டபின்
ஆங்கிலம் பயில ஆர்வம துற்றுப்
பலதுறைப் புகுந்து நலமுறக் கலையெலாம்
அற்புடன் கற்று விற்பனன் ஆகிக்
கலங்கா மலையென இலங்கினை மன்னே!
நீதி முறையினுங் கோதிலா அறிவுற்
றாங்கில நாடும் பாங்குற மேவி
நம்மவர் புகழினை நாட்டினை மன்னே!
இந்திய சட்ட சபையினும் இருந்து
முன்னுறப் பலபணி முயன்றனை மன்னே!
தொன்னக ராகுஞ் சென்னை அரசின்
அமைச்சர் தலைவனாய் ஆறாண் டமைந்து

கருவி காலஞ் செய்கை செய்வினை
ஆதி உணர்ந்து கோதிலா தருஞ்செயல்
அளவிலா தெமக்கிங் காற்றினை மன்னே !
அஞ்சா வன்மை எஞ்சா ஊக்கம்
துணிவோ டிருத்தல் துகளில் கல்வி
முற்ற அறிந்தபின் உற்றது செய்தல்
இரவலர்க் கீகை புரவலன் ஆதல்
ஆகிய குணங்கட் கருங்களன் ஆகிக்
காவற் சகடங் கால்ஒடிந் தோடிச்
சேற்றிற் படாவழிச் செலுத்தினை மன்னே !
அருந்தொழி லாளர் பெருந்தலை மாந்தரை
நாட்டினின் றகற்றிட நாடிய காலை
அவ்வா றின்னல் அவர்க்குறு வாறு
வேலையும் இழக்க மேவினை மன்னே!
எத்தகைப் பதவியும் ஏற்றுநம் இந்தியர்
ஆங்கிலர்க் கொப்பாய் யாங்கணும் மிளிர
அரசியல் முறையோ டஞ்சா தந்நாள்
பெரும்போர் புரிந்து விரும்பிய வகையே
இந்திய மயமாய் இயற்றினை மன்னே!
எண்ணருங் கோடி நண்ணிய போதினும்
அன்னவை சீயென் றகற்றி நாளும்
எஞ்சா ஆள்வினை தஞ்சமாக் கொண்டு
தொல்லறன் எல்லாம் நல்லறன் ஆகி
நலமுற ஈண்டற நிலயப் பாது
காப்புச் சட்டங் கண்டனை மன்னே!
மேனா டதற்கும் மேவி மாணவர்
மனோதத் துவமெனும் மாக்கலை பயிலவும்
ஆய்ந்துணர் புலவர் தாய்மொழித் தெலுங்கில்
பௌதிக சாத்திரப் பனுவல் பரப்பவும்

பெரும்பொருள் ஈந்து தரும்வகை ஈதென
நல்லறஞ் செய்து நாட்டினை மன்னே!
நாடெலாம் மருத்துவ உதவி நல்கிப்
புவியினிற் குடிகளைப் புரந்தனை மன்னே!
ஆயுள் வேத அருங்கலா சாலை
சென்னையில் மன்னிடச் செய்தனை மன்னே!
ஒடுக்கிய மக்களின் இடுக்கண் போக்கி
நடுநிலை ஆட்சி நல்கினை மன்னே!
பெண்கள் மேனிலை பெற்றிட நாடு
முன்னுறும் என்றே அன்னவர் மேனிலை
என்றுங் கருதி நின்றனை மன்னே!
அந்தோ! பானகல் அரசே! நின்றன்
மண்டிணி பொறையும் மன்னர் சூழ்ச்சியும்
அஞ்சா ஆண்மையும் எஞ்சா ஊக்கமும்
காண்டற் கெளிமையும் கைவினை வன்மையும்
எளிய வாழ்க்கையும் அளியுறு நோக்கும்
மாரி அன்ன பாரி வண்மையும்
தாய்மொழி யதனைப் போற்றிடுந் தகையும்
எங்கொளித் தனகொல்? பொங்கொளி மன்னா!
அவையெலாங் காற்றாய் அகன்றன கொல்லோ!
ஆய்ந்திடின் காலனுக் கவற்றினைக் கொன்றிடும்
வன்மை இன்மை என்ப துண்மை;
இக்கடன் ஞாலத்து மக்களிற் பல்லோர்
கண்டதே காட்சி கொண்டதே கோலமென்
றுண்டும் உடுத்தும் பெண்டின் புற்றும்
ஈவதும் அறியா தாவதும் உணரா
தெண்பது கோடி எண்ணி எண்ணிச்
செய்வகை ஒன்றும் எய்துதல் இன்றி
மேனிலை எய்திக் கீணிலை மேவிக்

காலுந் தளர்ந்து கையுந் தளர்ந்து
பல்லுந் தளர்ந்து சொல்லுந் தளர்ந்து
பாடுநர் இன்றிப் பரவுநர் இன்றித்
தேடுநர் இன்றித் தெரிகுநர் இன்றித்
தீயோ நிலனோ தின்றிட ஒழிவர்;
மற்றும் பலரோ புற்புதப் புகழுறல்
ஒன்றே கடனாய் ஒன்றே தொழிலாய்
ஒன்றே வாழ்வாய் ஒன்றே இலக்காய்
செய்வகை இன்றியுஞ் செய்திறன் இன்றியும்
நாக்கடிப் பாக வாய்ப்பறை அறைந்து
சில்லோர் போற்றப் பல்லோர் பகைக்கப்
பிறப்பின் பிறபயன் மறந்தொழிந் தழிவர்;
மற்றுஞ் சிற்சிலர் மாநிலந் தன்னில்
காணினுங் கேட்பினுங் கருதினுங் கழறினும்
ஆறா இன்பம் மாறா தீயும்
பூங்கொடி மகளிர் பாங்குடன் கூடிக்
களித்திடா நிலையில் வெளியிடைச் சுரத்திற்
பூத்துக் கழியும் பூமலர் போன்று
கற்றதம் பயனை மற்றவர் பெற்றிட
எண்ணுதல் இன்றிப் பண்ணவன் ஆகி
நில்லா உலகு நில்லா யாக்கை
நில்லா செல்வம் நில்லா புகழும்
எனும்பொய் யுரையால் மனந்தடு மாறி
நட்புஞ் சுற்றமும் நாடுதல் நீத்துக்
காலை கடும்பகல் மாலை நள்ளிருள்
கலைக்கடல் ஆடிக் கருதுநர் இன்றிக்
கொன்னே கழிவர் மன்பயன் இலாதே;
அவ்வா றிலாதெமக் கருந்தாய் ஆகி
அறவிலை வணிகன் ஆதல் கடிந்து

மானிடர் குற்றம் நானிலத் துரைக்குநன்
கடவுளைப் பழித்த மடமையன் ஆதலின்
பற்றலர் தமையும் பழிப்பது நீக்கித்
துன்பஞ் செய்குநர்க் கின்பமே புகுத்திச்
சுற்றங் காத்துக் கற்றவர் புரந்து
மன்பதைக் குழைப்பதே இன்பமாய்ப் பூண்டு
சொல்லா தெவையும் பல்வகை ஆற்றிக்
கரவா உருவொடு கரந்தனை அம்ம!
பதவி இழந்து பாரினில் நின்றபின்,
பெரும்புயல் வீசினும் பெருமழை பெய்யினும்
அடிபெயர்ந் தகலாக் கொடிஅரண் ஆகிப்
பழுதுறு வாறிங் கெழுநிலை மாடமாம்
ஆங்கில அரசினைத் தாங்கிடுந் தூணாய்
நின்னொளி கண்டு பின்வரும் அமைச்சர்
நலமுற ஆற்றக் கலங்கரை விளக்காய்க்
குன்றிடை நின்று குறுகிடுந் தீங்கினைச்
சேய்த்தே கண்டு செப்பிடுங் காவலாய்
நினக்கென வாழா தெமக்கென வாழ்ந்தனை,
அந்தோ! அந்தோ! இந்நாள் அகன்றிடக்
கல்லரண் விழுந்தது; கற்றூண் ஒடிந்தது;
கலங்கரை விளக்கும் பொலமிழந் தவிந்தது;
குறுகிடும் இன்னல் உறுமிடன் அறிந்துறக்
குன்றிலும் யாரிலர்! என்னுறுங் கொல்லோ;
என்செய் குவமால்! என்செய் குவமால்!
இராம ராய நிங்கார்! இந்நாள்
வீழ்குடி உழவன் விளைவின் பயனைத்
தமரொடும் உண்ண அமருங் காலை
விக்குளுக் கிரையாய் விண்ணுற் றதுபோல்
பயனுறு முன்னே பாய்ந்தொளிந் தனையே!

இந்திய மக்கள் முந்துறு மாறு
சாதி வேற்றுமை சமய வேற்றுமை
ஆதிய மூடக் கொள்கை அரண்களை
அழித்திட இளைஞர் உழிஞை சூடிக்
காடு மேடுங் கானமுங் கடந்து
செல்லுங் காலை பல்வகைப் பகைஞர்
தொடர்ந்தெமைப் பற்றி இடர்பல ஆற்றுவர்;
அத்துறை உழைப்பில் ஆண்டிருந் தெமர்க்குச்
செய்வன எல்லாஞ் செய்திட நாளும்
ஈண்டிருந் துன்னை வேண்டுவம் மாதோ.